பள்ளிகளில், வசதி உள்ளவர்களிடம், இன்கம்டாக்ஸ் கொடுக்கக் கூடியவர்கள், இவர்களிடம் சம்பளம் வசூல் செய்தால் அதில் தவறு என்ன இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது ஒரு கொள்கை, ஒரு பள்ளியிலே வசதியுள்ளவர்கள், வசதியில்லாதவர்கள் என்று பாகு பாடு செய்வது நல்லதல்ல.

பெண்கள் பள்ளிகள்

*106 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பெண்கள் பள்ளிகளில் ஆண்களை ஆசிரியர்களாக நியமிக்கக்கூடாது என இம்மாநில அரசாங்கம் உத்தரவு ஏதேனும் பிறப்பித்திருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அப்படிப்பட்ட உத்தரவு பிறப்பிக்கக் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

புலவர் கா. கோவிந்தன் : ஆரம்பப் பள்ளிகளிலே போடுகின்ற ஆசிரியர்கள் அத்தனை பேரும் பெண்களாக இருக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு போடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுதான் என்னுடைய கருத்து.

ஆட்சி மொழி (சட்டக்) கமிஷன்

*107 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சட்டச் சொற்களை தமிழில் தொகுப்பதற்கு ஒரு Legislative Commission ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) அதன் விவரம் என்ன ?

(உ) இந்தக் குழுவிற்கும் Central Legislative Commission -க்கும் தொடர்புண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Government have constituted an Official Language (Legislative) Commission for this State.

(b) The Commission consists of the officiating Chief Justice Sri M. Anantanarayanan, I.C.S., as Chairman and six other members, viz.—

SRI S. Venkateswaran, I.C.S., (Retd.),
DR. M. Varadarajan,
SRI K. Appadurai,
Secretary to Government, Law Department,
Director of Tamil Development, and
Director of Legal Studies.